**ரணவிரு சேவா அதிகார சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ரணவிரு சேவா அதிகாரசபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து ரணவிரு சேவா அதிகாரசபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை

இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை.

| குறிப்பிட்ட நியமங்களுடனான தொடர்புகளுடன் இணங்காமை. | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகார சபைக்குச் சொந்தமான மரத் தளபாடங்கள் மற்றும் உபகரணங்களில் 414 விடயங்கள் மற்றும் மின் உபகரணங்களில் 351 விடயங்கள் நடப்பாண்டில் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் 90 ஆம் பிரிவின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் உரிய வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் வருடத்தின் கொவிட் 19 தொற்று நோய் நிலைமையால் மட்டுப்படுத்தப்பட்ட பணிக்குழாமொன்று சுழற்சி முறையில் சேவைக்கு அழைக்கப்பட்டமை மற்றும் வீட்டிலிருந்து கடமைகள் மேற்கொள்ளப்பட்டமையால் அதிகார சபையின் சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்வதற்கு உரிய தகுதியுள்ள குழுவொன்று நியமிக்கப்பபடுவதற்கு தாமதமாகியமையால் வருட ஆரம்பத்திலும் சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட முடியாததிருந்ததுடன் அது 2021.12.31 திகதி மேற்கொள்ளப்பட்டு கணக்கிடப்பட்டிருந்தது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களில் திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல் களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இராணுவப் புனர்வாழ்வு மையத்திலிருந்து ரூபா 10,484,441 பெறுமதியான உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கான கட்டளைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்காக செலுத்த வேண்டிய தொகையாக ரூபா 8,200,000 கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஊனமுற்றோரின் உபகரணங்கள் செலவு ரூபா 2,284,441 ஆல் குறைவடைந்திருந்தது. | 2021 ஆம் வருடத்தில் ஊனமுற்ற படை வீரர்களுக்கு விநியோகிப்பதற்காக உதவிச் சாதனங்களை கொள்வனவு செய்வதற்காக படைவீரர்களுக்கான உதவிச் சாதனங்களுக்காக 2021.12.31 இல் செலுத்த வேண்டிய தொகை பதிவு செய்யப்பட்ட போது ஏற்பட்ட தவறொன்று காரணமாக உரிய வருடத்தில் ஊனமுற்ற படைவீரர்களின் உதவிச் சாதனங்கள் கொள்வனவு செய்தமைக்கான செலுத்த வேண்டிய செலவுகள் ரூபா 2,284,441 ஆல் குறைத்துக் | கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளின் உண்மையான தன்மை நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் வகையில் கணக்கிடப்படுவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | குறிப்பிடப்பட்டிருந்ததுடன், அதனால் நடைமுறை சொத்துக்களும் அந்த அளவினால் குறைவடைந்திருந்தது. இக் குறைபாடு 2022 ஆம் வருடத்தின் கணக்குகளில் திருத்தப்படும். | |
| (ஆ) | நடப்பாண்டில் பணிக்கொடை ஒதுக்கம் ரூபா 1,128,206 என்பதுடன் நிதிச் செயலாற்றல் கூற்றில் ரூபா 945,083 ஆகக் குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வருடத்தின் செலவுகள் ரூபா 183,123 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | நடப்பாண்டில் சேவையிலிருந்து நீங்கிச் சென்ற உத்தியோத்தரிடமிருந்து அதிகார சபைக்கு அறவிட வேண்டிய ரூபா 183,123.00 ஆன சம்பளத் தொகை, அவர்களுக்குரிய பணிக்கொடை பணிகளில் குறைக்கப்பட்டதன் பின்னர் மிகுதித் தொகை செலுத்தப்பட்டது. இவ்வாறு குறைக்கப்பட்டிருந்த சம்பளத்தொகை சம்பளம் மற்றும் ஏனைய கணக்கிற்கு செலவு வைக்கப்படுவதற்குப் பதிலாக பணிக்கொடைப் படிகள் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டதால் குறைபாடு ஏற்பட்டிருந்தது. இக் குறைபாடு ஏற்பட்டாலும், 2021 ஆம் வருடத்தின் நிதிச் செயலாற்றல் கூற்றில் தனிப்பட்டவரின் சம்பளப் பெறுமதிக்கு அல்லது அக் காலத்திற்கான மொத்த மிகைக்கோ தாக்கமொன்றை ஏற்படுத்தவில்லை என்பதை தெரிவிக்கின்றேன். | காலப்பகுதிக்கான கொடுக்கல் வாங்கல் அனைத்தும் சரியாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |
| (இ) | 2020 ஆம் வருடத்திற்கான பெற்றோர் பராமரிப்புக் கொடுப்பனவுகள் ரூபா 3,108,000 ஆனது 2021 ஆம் வருடத்தின் செலவுகளில் சேர்க்கப்பட்டிருந்தால் நடப்பாண்டின் செலவு அந்த அளவினால் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது. | 2020 ஆம் வருடத்தின் நிலுவைத் தொகை கடந்த வருடத்தில் சீராக்கல் கணக்கிற்கு வரவு வைக்கப்படுவதற்குப் பதிலாக 2021 ஆம் வருடத்தில் பெற்றோர் பராமரிப்புக் கொடுப்பனவு கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டதால் இக் குறைபாடு ஏற்பட்டிருந்தது. | மீளாய்வாண்டில் ஏற்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் அனைத்தும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |

2022 ஆம் வருடத்திலிருந்து கணக்கு வைத்தல் சரியாக செய்யப்படுமென்பதை தெரிவிக்கின்றேன்.

**1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்.**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரணவிரு சேவா அதிகார சபையின் இரு உத்தியோகத்தர்களுக்கு 2014 ஆம் வருடத்தில் வழங்கப்பட்டிருந்த ரூபா 1,830,450 ஆன முற்பணத் தொகை 2021 திசெம்பர் 31 வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | முதலாவது ஒழுக்காற்று விசாரணையில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டமையால், ஒரு நபர் தீர்ப்புச் சபையின் முடிவு தொடர்பாக திருப்தியடையவில்லை என்பதால் அமைச்சின் செயலாளரின் அறிவுறுத்தல் பிரகாரம் 2022.2.18 இலிருந்து மீண்டும் ஒழுக்காற்று விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அதன் விசாரணைகள் இதுவரை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. | அதிகார சபை அறவிட வேண்டிய தொகை விரைவில் குறிப்பிட்ட தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ரணவிரு பெற்றோர் பாதுகாப்பு கொடுப்பனவு முறைமையின் கீழ் 2016 யூன் மாதம் தொடக்கம் 2017 நவம்பர் மாதம் வரையான 18 மாதங்களில் கணக்கிற்கு உரித்துடைய இருவருக்கு முறையற்ற ரீதியில் ரூபா 5,940,500 ஆன தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. இத் தொகையில் ரூபா 4,978,580 மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இந்த முறைகேட்டிற்காக ஒரு பிரஜை மற்றும் ரணவிரு சேவா அதிகார சபையின் கடமை நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற 15 உத்தியோகத்தர்கள் அடங்கலாக 16 பேர் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர். அவர்களில் 6 பேர் ஆயுதப் படைக்கு இணைக்கப்பட்டிருந்ததுடன் அவர்கள் மற்றும் ஒரு பிரஜை தொடர்பாக தாபனக் கோவையின் பிரகாரம் சட்டரீதியான நடவடிக்கை எடுக்க முடியாது. ஏனைய 9 உத்தியோகத்தர்களில் 7 பேர் சேவையிலிருந்து விலகிச் சென்று விட்டனர். 2 பேர் மட்டும் தற்போது சேவையில் உள்ளனர் அந்த இருவரைத் தவிர மற்ற உத்தியோகத்தர்களுக்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் மூலம் | அதிகார சபை அறவிட வேண்டிய தொகை விரைவில் குறிப்பிட்ட தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

கோட்டை நீதவான் நீதி மன்றத்தில் இலக்கம் பீ/11041/2018 இன் கீழ் முறைப்பாடொன்று கோவைப்படுத்தப்பட்டு உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கைப் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.2 ஆம் பிரிவு | மீளாய்வாண்டில் பெறுகைக் கால குறிப்பொன்று தயாரிக்கவில்லை என்பதை ஏற்றுக்கொள்கின்றேன். 2022 ஆம் வருடத்திற்கு பெறுகைக் குறிப்பொன்று தயாரிக்கப்பட்டிருப்பதை தயவுடன் தெரிவிக்கின்றேன். | பெறுகை வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**1.8 நிதி முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| விரு நிவாரண வீட்டுச் செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக (மீண்டும் செலுத்தும் அடிப்படையில்) ரூபா 281,300,000 ஆன தொகையொன்று மற்றும் சொத்துக்கள் கொள்வனவு செய்வதற்கு ரூபா 12,000,000 ஆன தொகையொன்று பொதுத் திறைசேரியிடமிருந்து நடப்பாண்டில் அதிகார சபைக்கு கிடைத்திருந்ததுடன் அப் பெறுமதி இரண்டும் சேர்க்கப்பட்டு மூலதன மானியத்தின் கீழ் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | சொத்துக்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 12,000,000.00 ஆன தொகையொன்றும் படையினருக்கு கடன் வழங்கப்படுவதற்கு ரூபா 281,300,000 ஆன தொகையொன்றும் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த அனைத்து தொகையும் அரச பங்களிப்பு மூலதனக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அரச பங்களிப்பு மூலதன கணக்கின் மீதி ரூபா 293,000,000.00 ஆக நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது எளிதாக இனங்காணக்கூடிய வகையில் குறிப்பொன்றாக எதிர்கால கூற்றுக்களில் குறிப்பிடப்படுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. | |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான அதிகாரசபையின் செயற்பாட்டு பெறுபேறுகள் ரூபா 19,846,298 மிகை-யொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 11,933,946 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 7,912,352 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய வருடத்துடன் ஒப்பிடும்போது செயற்பாட்டு செலவுகள் ரூபா 171,394,588 ஆல் அதிகரித்ததை விட மொத்த வருமானம் ரூபா 179,306,940 ஆல் அதிகரித்தமை இம்முன்னேற்றத்திற்கு காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பொது முயற்சிகள் திணைக்களத்தின் PED/12 சுற்றறிக்கையின் 9.12 ஆம் பிரிவின் பிரகாரம் பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்படாது அக்ரஹார காப்புறுதி தவணைப் பணத்தின் அரைவாசி செலவாக ரூபா 404,500 அதிகார சபையால் செலுத்தப்பட்டிருந்தது. | பொது முயற்சிகள் திணைக்களத்திடம் இது தொடர்பான அங்கீகாரம் பெறுவதற்காக பாதுகாப்பு அமைச்சின் பரிந்துரையுடன் கடிதமொன்று பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு 2021 ஆம் வருடத்தில் அனுப்பப்பட்டுள்ளது. அதற்காக இதுவரை பதில் கிடைக்கவில்லை. ஆகையால் அக்ரஹார காப்புறுதி உத்தேச திட்டத்தில் மாதாந்த தவணைப் பணத்தில் 50% தொகையொன்று அதிகார சபையால் செலுத்தப்பட்டிருந்ததுடன் பொது முயற்சிகள் திணைக்களத்தின் முடிவின் பிரகாரம் நடவடிக்கைை எடுப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | நலன்புரி உத்தேசத் திட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் தேவைப்படுகின்ற சகல அங்கீகாரங்களும் பெறப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| விருசரு அட்டைகள் தயாரிப்பதற்காக பாதுகாப்பு அமைச்சிடம் 2016 ஆம் வருடத்திலிருந்து பெறப்பட்ட ரூபா 16,607,026 ஆன | விருசரு அட்டைகள் வழங்கும் இரண்டாம் கட்டத்திற்காக அத் தொகை பயன்படுத்தப்படுமென குறிப்பிடப்பிடப்பட்டிருந்தாக குறிப்பிடப்பிடப்பட்டிருந்தது. | உறுதியான நோக்கமொன்றுக்கு பெறப்படும் பணம் செயற்திறனாக அந் நோக்கத்திற்காக |

| | | | |
|---|---|---|---|
| | தொகையில் ரூபா 3.607,941 ஆன தொகையொன்று சேமிக்கப்பட்டிருந்ததுடன் அத்தொகை பயன்படுத்தப்படாது 05 வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | | பயன்படுத்தப்படுவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.3 பெறுகை முகாதைத்துவம்.**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 1.2.1(இ) பந்தியில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு முரணாக போட்டித்தன்மையுடன் போதியளவு வழங்குநர்கள் சமர்ப்பிக்கப்படாத 5 சந்தர்ப்பங்களில் தொழில்நுட்ப மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | மட்டுப்படுத்தப்பட்ட தேசிய போட்டி விலை மனுக்கோரல் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டும் நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் போடப்பட்டிருந்தமை மற்றும் கட்டாயமாக ஊனமுற்றோருக்கான சாதனங்கள் படையினருக்கு வழங்கப்பட வேண்டுமென்பதால் மற்றும் வருட இறுதியில் மட்டுப்படுத்தப்பட்ட காலமொன்றே இருந்த படியால் பதிவுத்தபால் மூலம் விலை மனுக்கோரல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | பெறுகை நடவடிக்கைகளின் போது பெறுகை வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகள் பின்பற்றப்படல் வேண்டும். |
| (ஆ) | ரூபா 2,510,000 பெறுமதியான Cochlear Implant replacement அலகு பெற்றுக் கொள்வதற்காக பெறுகை நடைமுறைகளுக்கு முரணாக ஒரு நிறுவனத்திடம் பெறப்பட்ட மனுவொன்று, செவிப்புலன் கருவிகளை கொள்வனவு செய்வதற்காக தொழில்நுட்ப மதிப்பீடு செய்யப்பட்டு அத் தொழில்நுட்ப மதிப்பீட்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டு பெறுகைக் குழுவின் அங்கீகாரம் பெறுதலானது வெளிப்படையாக மேற்கொள்ளப்படாமை அவதானிக்கப்பட்டது. | NT (CP 1000) மொடல் உள்ளடங்கிய Cochlear Implant Processor செவிப்புலன் உபகரணமொன்று வழங்கப்படுவதற்கு உரிய படையினரால் மேற்கொள்ளப்பட்டிருந்த கோரிக்கை மற்றும் சமர்ப்பட்டிருந்த செவிப்புலன் பரிசோதனை அறிக்கை விசேடமாக மருத்துவர் ஒருவரினால் பரீட்சிக்கப்பட்டு வழங்கப்பட்டிருந்த பரிந்துரையின் அடிப்படையில் NT (CP 1000) மொடல் உள்ளடங்கிய Cochlear Implant Processor செவிப்புலன் உபகரணமொன்று | பெறுகை நடவடிக்கைகளின் போது பெறுகை வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகள் பின்பற்றப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வழங்குவதற்காக காணப்படுகின்ற விசேடமான ஒரேயொரு நிறுவனமான ஜே.எம்.விக்கிரமாராச்சி நிறுவனத்திடமிருந்து நேரடியாக மனுக்கள் கோரப்பட்டு, அதற்காக நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரை மற்றும் பெறுகைக் குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் குறிப்பிட்ட செவிப்புலன் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | |
| (இ) | ஊனமுற்றோருக்கான உதவிச் சாதனங்களை வழங்குவதற்காக பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட சகல சந்தர்ப்பங்களிலும் மட்டுப்படுத்தப்பட்ட விலைமனுக்கோரலின் கீழ் விலை மனு அழைப்பிதழ்களை அனுப்புவதற்கான வழங்குநர்களின் தேர்வு வெளிப்படையாக மேற்கொள்ளப்படாததுடன் ஒரு பொருளொன்று வழங்கப்படுவதற்கு பல சந்தர்ப்பங்களில் விலைமனுக்கல் கோரப்பட்டிருந்த சந்தர்ப்பங்களும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன. அதன் பிரகாரம் குறிப்பிட்ட திட்டமிடப்பட்ட வழங்குநர்களுக்கு மனு அழைப்பிதழ்களை அனுப்பபட்டிருக்காமை தெரியவந்துள்ளது. | நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் போடப்பட்டு ஊரடங்கு நிலைமையின் பின்னர் நடமாட்டக் கட்டுப்பாடுகள் போடப்பட்டதால் மட்டுப்படுத்தப்பட்ட தேசிய போட்டி முறைமையில் விலை மனுக் கோரப்படுவதற்கு முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் பதிவுத் தபால் மூலம் விலை மனுக்கள் கோரப்பட்டன. சில பொருட்களுக்காக 2021 ஆம் வருடத்தில் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் இல்லாத சந்தர்ப்பத்தில் 2020 ஆம் வருடத்தில் பதிவு செய்யப்பட்ட வழங்குநரிடமிருந்து விலை மனுக்கள் கோரப்பட்டதாகவும் சில பொருட்களுக்கான விலை மனுக்கள் சமர்ப்பிக்கப்படாமை மற்றும் விலை மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டு பொருட்களுக்கான மாதிகள் சமர்ப்பிக்கப்படாமை போன்ற காரணங்களினால் பல சந்தர்ப்பங்களில் விலை மனுக்கள் கோரப்பட்டிருந்தாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | பெறுகை நடவடிக்கைகளின் போது பெறுகை வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகள் பின்பற்றப்படல் வேண்டும். |